**ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட் காலம் மீளாய்வு செய்யப்படாமையால் முழுமையாக பெறுமானந் தேய்விடப்பட்டிருந்த ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 25,341,128 ஆன சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச் சொத்துக்கள் தற்போது பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்படுவதுடன் விசாரணையின் பிரகாரம் நாம் அவற்றை மீள் மதிப்பீடு செய்ய வேண்டும். அத்துடன் இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 25,341,128 உட்பட நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து சொத்து தொகுதிகளுக்கும் உரிய சொத்துக்களை உள்ளடக்கியுள்ளது. யாதாயினும் ஒன்று மீள் மதிப்பீடு செய்யப்பட்டால் அந்த அனைத்து தொகுதிகளுக்கும் உரிய நிறுவனத்தின் அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதால் அது மிகவும் அதிக செலவொன்று ஏற்படக்கூடிய பணியொன்றாக கணக்காய்வுக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாகக் கணக்கிடப்படாத காரணத்தால் மீளாய்வாண்டில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பதிவளிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,525,760 அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நாளேட்டு பதிவொன்றின் மூலம் இச் சீராக்கம் திருத்தப்படுவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வுச் செலவு சரியாக கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்குகள் தயாரித்தல் அட்டுறு அடிப்படையில் | அங்கீகாரம் வழங்கப்பட்டவுடன் அது 3 | கணக்கீட்டுக் காலத்தை |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படுவதாக நிதிக்கூற்றுக்களில் வெளிக் காட்டப்பட்டிருந்த போதிலும் சபையின் வருமானம் கணக்கிடப்படுதல் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் 2022 ஆம் வருடத்திற்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,492,864 மற்றும் 2020 ஆம் வருடத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3,585,390 முறையே எதிர்வரும் வருடத்திற்கான வருமானமொன்றாக மற்றும் முன்னைய வருட சீராக்கமொன்றாக கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டில் வருமானமொன்றாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் மிகை ரூபா 14,126,700 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் வருடாந்தக் கட்டணமொன்று அறவிடப்படுகின்றது. எப்போதாவது அங்கீகார அமைப்பு அதைத் திரும்பப் பெறாதவரை வருடாந்தக் கட்டணம் தொடர்ந்தும் அறவிடப்பட்டு வருவதால் காலத்தை கருத்திற் கொள்ளாது வருடத்திற்கான கணக்கிடல் செய்யப்படுகின்றது. அதாவது 2022 ஆம் ஆண்டிலிருந்து இதன் பிரகாரம் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அடிப்படையாகக் கொண்டு வருமானம் மற்றும் செலவுகள் சரியாக நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டுதவியாக 2020 ஆம் வருடத்தில் கிடைத்த 92,465 யூரோ பெறுமதியான 03 தொழில் நுட்ப மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள், 2021 ஆம் வருடத்தில் கிடைத்த யூரோ 155,191 பெறுமதியான 02 ஆய்வுகூட உபகரணங்களும்மாக மொத்தப் பெறுமதி யூரோ 247,656 ஆன உபகரணங்கள் சொத்துக்களாக மற்றும் வெளிநாட்டுதவி பெறவனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கையில் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள அங்கீகாரத் திட்டங்களை மேம்படுத்துவதற்கான வசதிகள் மற்றும் சேவை வழங்குநராக சபை செயற்படும் போது PTB நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள உபகரணங்களின் பயனாளிகளை குறிப்பாக அடையாளம் காணும் வரை அதற்காகச் செய்யப்படுகின்ற விடுவிப்புச் செலவுகள் மட்டும் சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளதுடன் உரிமையை மாற்றும் சந்தர்ப்பத்தில் அது கணக்குகளிலிருந்து விலக்கப்படும். 2022 ஆம் வருடத்தில் இந்த | எவ்வகையிலும் நிறுவனத்தால் பெறப்பட்ட சொத்துக்கள் முறையாகக் கணக்கிடப்பட்டு பயன்படுத்தப்படு வதற்கு அல்லது நிறுவனத்தில் விளைவற்றதாக வைத்திருக்காமல் வேறு நிறுவனங்களுக்கு உடனடியாக கையளிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சொத்துக்களில் சில அடையாளங் காணப்பட்ட சில நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,524,699 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 10,283,005 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,241,694 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 7,069,638 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

## 3.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து ஐந்து மாதங்களின் பின்னர் சபையின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கை 2022 ஆகஸ்ட் 01 வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட அறிக்கையின் அச்சீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன் அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் 28 செயற்பாடுகள் வருடத்தில் மேற்கொள்ளப்படாமை 2021 திசெம்பர் 31 இல் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் பரிசோதிக்கப்பட்ட போது அவதானிக்கப்பட்டது. | இதுவரை கருத்துரை வழங்கப்படவில்லை. | வருடத்தில் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |